இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 09-06-2023

# நேருக்கு நேராக வரலாம்!

**ஆளுநர் ஆர்.என்.இரவிக்கு தைரியம் இருந்தால் நேருக்கு நேராக அரசியல் களத்துக்கு வந்து மோதட்டும். அதைவிட்டு ஆளுநர் பதவிக்குள் பதுங்கிக் கொண்டு அரசியல் செய்ய முனையக் கூடாது. ஜாகையை கமலாலயத்திற்கு மாற்றிக் கொண்டு களத்துக்கு வரட்டும். அப்போது முழுமையாக வைத்துக் கொள்ளலாம் கச்சேரியை!**

ஒரு நியமனப் பதவியில் உட்கார்ந்து கொண்டு தினமும் அவர் செய்து கொண்டு வரும் குடைச்சல்கள் சகிக்க முடியாதவையாக இருக்கின்றன. அவர் ஏதோ இந்திய நாட்டின் குடியரசுத் தலைவரைப் போலவோ அல்லது இந்திய மன்னரைப் போலவோ மனதுக்குள் நினைத்துக் கொள்கிறார். தமிழ்நாட்டில் உட்கார்ந்து கொண்டு தமிழ்நாட்டுக்கு எதிரான அனைத்தையும் செய்து கொண்டு இருக்கிறார் ஆர்.என். இரவி. அதேநேரத்தில் மற்ற பல மாநிலத்தின் விழாக்களை இங்கே உட்கார்ந்து கொண்டு கொண்டாடிக் கொண்டு இருக்கிறார்.

★ குஜராத் மாநிலம் உருவான தினம்
★ மகாராஷ்டிரா மாநிலம் உருவான தினம்
★ மிசோரம் மாநிலம் உருவான தினம்
★ கோவா மாநிலம் உருவான தினம்
★ தெலுங்கானா மாநிலம் உருவான தினம் –

– என்று மற்ற மாநிலங்கள் உருவான தினத்தைக் கொண்டாடிக் கொண்டு இருக்கிறார். பொழுது போகவில்லை என்றால் ஊரில் உள்ள அனைவர் பிறந்தநாளையும் கொண்டாடிக் கொள்ள வேண்டியது தான். மனதுக்குள் இந்திய நாட்டையே தான் ஆள்வதாக அவர் நினைத்துக் கொள்கிறார் போலும்!

**‘தமிழ்நாடு’ என்று சொல்லக் கூடாதாம். ஆனால் மற்ற மாநில விழாக்களை தமிழ்நாட்டில் கொண்டாடுவாராம். ‘மாநிலங்களே எதற்காக?’ என்று கேட்பாராம். ஆனால் வாராவாரம் மாநில விழாக்களைக் கொண்டாடுவாராம். ‘மாநிலங்களே இந்தியாவின் ஒருமைப்பாட்டைக் குலைக்கிறதாம்’. ஆனால் அவர் மட்டும் ஒரு மாநிலத்தின் ஆளுநராக இருந்து கொண்டு அதிகாரத்தை அனுபவிப்பாராம். எத்தகைய ஏமாற்று இது?!**

புதிய கல்விக் கொள்கையை வலியுறுத்தும் வகையில் துணைவேந்தர்கள் மாநாட்டை நடத்தப் போவதாக ஆளுநர் சொன்னார். ‘இணைவேந்தரான எனக்கே தெரிவிக்காமல் துணைவேந்தர்கள் கூட்டத்தை எப்படி நடத்தலாம்?’ என்று உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் பொன்முடி கேட்டார். உடனே பதுங்கினார் ஆளுநர். புதிய கல்விக் கொள்கை பற்றிய ஆலோசனைக் கூட்டம் என்று முதலில் அறிவிக்கப்பட்ட கருத்துருவையே மாற்றி, தாய்மொழிக் கல்வியை வலியுறுத்தும் மாநாடு போல மாற்றிச் சொன்னார்கள். தாய்மொழிக்கல்வி குறித்து ஆளுநருக்கு ஏதாவது கருத்து இருக்குமானால் அதனை தமிழ்நாடு அரசுக்கோ அமைச்சருக்கோ தான் சொல்ல வேண்டுமே தவிர துணைவேந்தர்களை எல்லாம் ஊட்டிக்கு அழைத்து சொல்ல வேண்டிய அவசர அவசியம் என்ன வந்தது?

**பல்கலைக் கழகத் துணைவேந்தர்களைக் கூட்டி வைத்துக் கொண்டு – தொழில் முதலீடுகளை ஈர்ப்பதைப் பற்றி பேசி இருக்கிறார் ஆளுநர். துணைவேந்தர்களிடம் என்ன பேச வேண்டும், தொழிலதிபர்களிடம் என்ன பேச வேண்டும் என்ற அடிப்படை கூடவா தெரியவில்லை?**

தமிழ்நாட்டை நோக்கி முதலீடுகள் வந்து கொண்டு இருக்கின்றன. கடந்த இரண்டு ஆண்டு காலத்தில் 250க்கும் மேற்பட்ட புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளன. ரூ.2 லட்சம் கோடி மதிப்பிலான திட்டங்கள் இவை. தொழில் முதலீட்டாளர்கள் மாநாடு நடத்தப்பட்டுள்ளது. உலகளாவிய தொழில் முதலீட்டாளர் மாநாட்டை வரும் 2024 சனவரியில் நடத்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திட்டமிட்டு முனைப்புடன் செயல்பட்டு வருகிறார். துபாய் மற்றும் ஐக்கிய அமீரக நாடுகளுக்குச் சென்று முதலீடுகளை ஈர்த்து வந்துள்ளார் முதலமைச்சர் அவர்கள். பத்து நாள் பயணமாக ஜப்பான், சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்குச் சென்று ரூ.3000 கோடி மதிப்பிலான ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு அவர்களை தமிழ்நாட்டில் தொழில் தொடங்க வைத்துள்ளார். ‘ஐயகோ! தமிழ்நாடு முன்னேறிவிடுமோ?’ என்று சில வயிற்றெரிச்சல் பேர்வழிகள் அலறுவதைப் போல ஆளுநரும் அந்தக் கூட்டத்தில் சேர்ந்துவிட்டார் போலும்!

**‘நாம் வேண்டுகோள் விடுப்பதாலோ அல்லது அவர்களது நாடுகளுக்குச் சென்று பேசுவதாலோ மட்டும் முதலீட்டாளர்கள் முதலீடு செய்ய முன்வரமாட்டார்கள். முதலீடு செய்வதற்கேற்ற சூழலும் திறன்பெற்ற மனித ஆற்றலும் இருந்தால்தான் முதலீட்டாளர்கள் முன் வருவார்கள்’ என்று தனது பொறாமைக் குணத்தை வார்த்தைகளால் முணுமுணுக்கிறார் ஆளுநர். முதலீட்டுச் சூழலும் திறன் பெற்ற மனித ஆற்றலும் இங்கு இருப்பதால் தான் தமிழ்நாட்டை நோக்கி நிறுவனங்கள் வருகின்றன. அதனை இவர்கள் எல்லாம் கெடுக்காமல் இருந்தால் போதும். சென்னையில் இருந்து காஞ்சிபுரம் – திருவள்ளூர் – ஸ்ரீபெரும்புதூர் – சோழிங்கநல்லூரைச் சுற்றி வந்தால் போதும் உருவாகி நிற்கும் நிறுவனங்கள் பலதும் தமிழினத் தலைவர் கலைஞரின் 1996-2001 ஆட்சி காலத்தில் மலர்ந்தவை. அப்போது எந்த ஆர்.என்.இரவிக்கள் அறிவுரைப்படி இதனைச் செய்யவில்லை கலைஞர். இந்தியாவில் யாரும் உருவாக்க முன் வராத காலத்தில் உலக ஐ.டி. நிறுவனங்கள் அனைத்தும் ஒரே இடத்தில் இருக்க டைடல் பார்க் கட்டியவர் கலைஞர். அதனால்தான் அவரது பெயரால் மிகப் பெரிய கன்வென்ஷன் சென்டர் உருவாக்க இருக்கிறார் இன்றைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். இந்த மாநிலத்துக்கும், மாநில மக்களுக்கும் எதைச் செய்து தர வேண்டும் என்பது திராவிட முன்னேற்றக் கழக அரசுக்குத் தெரியும். ஏனென்றால் தி.மு.க. என்பது தமிழ் மண்ணில் மலர்ந்து 75 ஆண்டுகளைக் கடந்து வளர்ந்து நிற்கும் – காலா காலத்துக்கு நிற்கும் ஆலமரம் ஆகும்.**

**ஆளுநர் பதவி என்பது ஒன்றியத் தலைமையால் தற்காலிகமாக கொண்டு வந்து வைக்கப்படும் குரோட்டன்ஸ் தொட்டி. தொட்டி, தோப்பாகாது. எனவே, வெட்டிப் பேச்சுகளை விடுக்க ஆளுநரைக் கேட்டுக் கொள்கிறோம்!**

# கலைஞர் நூற்றாண்டு விழாவையொட்டி 5 லட்சம் மரக்கன்றுகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திட்டத்தை தொடங்கி வைத்தார்!

சென்னை, ஜூன் 9 -

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி 5 இலட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மரக்கன்று நட்டு வைத்து தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.6.2023) சென்னை, கிண்டியில் உள்ள நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய வளாகத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி, 5 இலட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டத்தினை, மரக்கன்று நட்டு வைத்து தொடங்கி வைத்தார்.

“மரத்தை நாம் வளர்த்தால் மரம் நம்மை வளர்க்கும்” என்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சொல்லிற்கிணங்க, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாநில நெடுஞ்சாலைகளிலும் 5 இலட்சம் மரக்கன்றுகள் நடப்படும் என்றும், இதனால் மாநில நெடுஞ்சாலைகளில் இடைவெளி இல்லாமல் மரங்கள் வளர்க்கப்படும் என்ற இலக்கு எட்டப்படும் என்றும் 2023-2024ஆம் ஆண்டு நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா தொடக்க நாளான நேற்று முன்தினம் (7.6.2023) தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சென்னை கிண்டியில் உள்ள நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய வளாகத்தில், 5 இலட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டத்தினை மரக்கன்று நட்டு வைத்து தொடங்கி வைத்தார்.

நேற்றைய தினம் தமிழக மெங்கும் நெடுஞ்சாலை துறையின் 340 சாலைகளில் நடப்படவுள்ள மகிழம், வேம்பு, புளியன், புங்கன், நாவல், சரக்கொன்றை போன்ற வகையைச் சார்ந்த சுமார் 46,410 மரக்கன்றுகள், 24 மாத காலம் வளர்ச்சிக் கொண்டவையாகும். மேலும், பருவமழைக்கு முன்பாகவே 5 இலட்சம் மரக்கன்றுகளையும் நடுவதற்கு திட்டமிடப் பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரை முருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.பாலு, திருமதி. தமிழச்சி தங்கபாண்டியன், பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்ட இயக்குநர் அண்ணாதுரை, நெடுஞ்சாலைத் துறை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகு தலைமைப்பொறியாளர் இரா. சந்திரசேகர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.6.2023) சென்னை, கிண்டியில் உள்ள நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய வளாகத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி, 5 இலட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டத்தினை, மரக்கன்று நட்டு வைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.பாலு, திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### டெண்டர் முறைகேடு புகாரில்

# எஸ்.பி.வேலுமணி மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கலாம்!

## சென்னை உயர்நீதிமன்றம் அதிரடி உத்தரவு!



சென்னை, ஜூன் 9 –

கடந்த 2020 ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியின்போது அறப்போர் இயக்கம் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு ஒன்றை தாக்கல் செய்திருந்தது.

சென்னை மாநகராட்சி பகுதிகளில், கடந்த 2018 மற்றும் 2019–ம் ஆண்டுகளில் சாலை மறு சீரமைப்பு, மழை நீர் வடிகால் கட்டமைப்புகளுக்கான 37 டெண்டர் ஒதுக்கீடு நடைபெற்றதாகவும், சுமார் 300 கோடி ரூபாய் மதிப்பில் 3 ஆயிரத்து 800 சாலைகள் மறு சீரமைப்பு மற்றும் 290 கோடி ரூபாய் மதிப்பிலான மழைநீர் வடிகால் பணிகளுக்கான டெண்டர்களில் பல்வேறு முறை கேடுகள் நடைபெற்றுள்ளதாக அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஒரே ஐ.பி. முகவரியிலிருந்து விண்ணப்பித்த குறிப்பிட்ட சிலருக்கு மட்டுமே இந்த டெண்டர்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும், இந்த முறைகேடுகளில் அப்போதைய உள்ளாட்சி துறை அமைச்சர் வேலுமணி மற்றும் அதிகாரிகள் ஈடுபட்டதாகவும், இது குறித்து உரிய விசாரணை நடத்த உத்தரவிட வேண்டும் எனவும் அந்த மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்நிலையில், தலைமை நீதிபதி கங்கா பூர்வாலா, நீதிபதி ஆதிகேசவலு அடங்கிய அமர்வு முன் இந்த மனு விசாரணைக்கு வந்தது.

அப்போது அரசு தலைமை வழக்கறிஞர் ஆர்.சண்முகசுந்தரம், அரசு தலைமை குற்றவியல் வழக்கறிஞர் அசன் முகமது ஜின்னா ஆகியோர் ஆஜராகி, இந்த வழக்கில் ஆரம்ப கட்ட விசாரணை நடத்தப்பட்டு விட்டதாகவும், இந்த வழக்கில் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து உயர்நீதிமன்ற ஒப்புதல் பெற வேண்டும் என ஏற்கனவே உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து அனைத்துத் தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், ஏற்கனவே பிறப்பிக்க ப்பட்ட உத்தரவு மாற்றி அமைக்கப்படுவதாகவும், இந்த வழக்கில் அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்க எந்த தடையும் இல்லை என்றும் கூறி வழக்கை முடித்து வைத்தனர்.

### மாற்றுத் திறனாளிகளுக்கு ரூ.3.30 லட்சத்தில் இருசக்கர வாகனங்கள் வழங்கல்!

# திண்டிவனத்தில் ரூ.43 லட்சத்தில் சிறுவர் பூங்கா!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் திறந்து வைத்தார்!

*திண்டிவனம் ஜூன் 9 -*

*விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் நகராட்சி 23 வது வார்டு வகாப் நகரில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூபாய் 43 லட்சம் மதிப்பீட்டில் புதிய சிறுவர் பூங்கா அமைக்கப்பட்டு அதன் திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது.*

*திண்டிவனம் நகர மன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு ரூபாய் 43 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய சிறுவர் பூங்காவை மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.*

*தொடர்ந்து திண்டிவனம் நகராட்சி 6வது வார்டு பகுதியைச் சேர்ந்த இஸ்மாயில் பேக்கின் மகன்களான கை, கால், வளர்ச்சியின்றி உள்ள மாற்றுத்திறனாளிகள் ஷபி பேக், அலிபேக் ஆகிய இருவருக்கும் விழுப்புரம் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் ரூபாய் 3 லட்சத்து 30 ஆயிரம் மதிப்பீட்டிலான மின்சார பேட்டரியில் இயங்கும் இருசக்கர வாகனத்தை அமைச்சர் செஞ்சி மஸ்தான் நேரில் சென்று வழங்கினார்.*

*இதையடுத்து திண்டிவனம் சந்தைமேடு பகுதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள உயர்மின் கோபுர விளக்கினை மக்கள் பயன்பாட்டுக்கு அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார்.*

*நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சீதாபதி சொக்கலிங்கம், நகரச் செயலாளர் கண்ணன், மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர், ஒலக்கூர் சேர்மன் சொக்கலிங்கம், பொருளாளர் ரமணன், மயிலம் வடக்கு ஒன்றியச் செயலாளர் மணிமாறன், ஒலக்கூர் மேற்கு ஒன்றிய செயலாளர் ராஜாராமன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் சந்திரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.*



கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரில் உள்ள நெடுஞ்சாலையில் சாலையோரம் மரக்கன்றுகள் நடும் பணியை 6.06.2023 அன்று பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மற்றும் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன் ஆகியோர் மரக்கன்றுகள் நட்டு தொடக்கி வைத்தனர். உடன் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் அ.அருண்தம்புராஜ், கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன், நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா.இராஜேந்திரன், விருத்தாசலம், சட்டமன்ற உறுப்பினர் எம்.ஆர்.இராதாகிருஷ்ணன், காட்டுமன்னார்கோயில் சட்டமன்ற உறுப்பினர் மா.சிந்தனைச் செல்வன், கடலூர் மாநகர மேயர் திருமதி.சுந்தரி ராஜா, மாநகர துணை மேயர் பா.தாமரைச் செல்வன், மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் இரா.இராஜாராம் ஆகியோர் உள்ளனர்.